# லலித் கட்சியின் பொதுச் செயலாளர் உட்பட 40 பேர் கைதாகி 6 மணிநேரத்தின் பின் விடுவிப்பு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 10 இதழ் 67
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23 — 04 — 1993

(கொழும்பு)
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சியின் பொதுச் செயலர் ஜி.எம். பிரேமச்சந்திரா உட்பட அவரது வீட்டிலிருந்த 40 பேர் நேற்று முன்தினம் இரவு பொலிசாரால் கைது செய்யப்பட்டு 6 மணி நேரத்தின்பின் நேற்று அதிகாலை விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் குருநாகல் மாவட்டத்திலுள்ள மாவத்த (4-ம் பக்கம் பார்க்க)

### இடைக்காட்டில்
## இருகட்டமாக ராணுவ நடவடிக்கை இடம்பெற்றது

(கொழும்பு)
இடைக்காட்டுப் பகுதியில் 'சுலி சுலங்' என்ற இராணுவ நடவடிக்கை இரு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டதாக கூட்டுப்படை சிரேஷ்ட பேச்சாளர் பிரிகேடியர் நலின் அங்கமன நேற்று தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மத்தியில் அவர் உரையாற்றுகையில், வடக்கு-கிழக்குப் பகுதியில் இருவார காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை தொட (4-ம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்னைக்கு இவ்வருடம் சமாதானத் தீர்வு காண்போம்!

## நாடாளுமன்ற கூட்டத்தொடரில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)
தமிழர் பிரச்னைக்கு இந்த வருடம் சமாதானத்தீர்வு காணப்பட வேண்டும். இந்த நாட்டில் தீர்க்கப்படாமல் இருக்கும் ஒரே பிரச்னை வடக்கு-கிழக்கு பிரச்னையாகும். இந்தப் பிரச்னைக்கு நாம் அதிமுக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வடக்கு கிழக்கு பிரச்னைக்கு சமாதானத்தீர்வு காணப்படுவது நம் முன்னே உள்ள மிகப்பாரிய அவசரமான பொறுப்பாகும் என்று கூறினால் அது மிகையாகாது.

ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா இவ்வாறு கூறினார்.

நேற்றுக்காலை இரண்டாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது நாடு துண்டாவதைப் பிரிவதை சமாதானத் தீர்வின் மூலம் நாம் தடுக்க வேண்டும். இதனைச் செய்வதன் மூலம் பாதுகாப்புக்காக நாம் செல (4-ம் பக்கம் பார்க்க)

### ஆனையிறவு தாக்குதல்
## இளாலி போக்குவரத்தை தடைசெய்யவாம்

(கொழும்பு)
இளாலி ஊடாக நடைபெறும் போக்குவரத்தைத் தடைசெய்யவே கடந்த புதன்கிழமை ஆனையிறவுப் பகுதியில் ராணுவ நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டதாக ராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இந்தப் பாதையை பயன்படுத்துகிறார்கள் என்றுகூறி இளாலி கடற்பிரதேசத்தில் துப்பாக்கிப் (4ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி அங்கத்தவர் 80 பேர் வெளிநடப்பு

(கொழும்பு)
இரண்டாவது நாடாளுமன்றத்தின், 5-வது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிஆர். பிரேமதாஸ ஆற்றிய உரையை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்து வெளிநடப்புச் செய்தனர்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உரை ஆரம்பமானபோது சபையிலிருந்த நூறு எதிர்க்கட்சி உறுப்பினர்களில் 80பேர் வெளிநடப்புச்செய்தனர்.

அரசின் கொள்கைகளை எதிர்த்தும், மாகாணசபைகளுக்கு அதிகபட்ச அதிகாரங்கள் வழங்க மறுப்புத் தெரி (4-ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை நிறைவேறியது

(கொழும்பு)
அவசர கால நீடிப்பு பிரேரணை 95 அதிகப்படியான வாக்குகளால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 165 வாக்குகளும் எதிராக 37 வாக்குகளும் கிடைத்தன.

நாடாளுமன்றம் மீண்டும் அடுத்த மாதம் 20ம் திகதி கூடவுள்ளது. (ஈ-இ)

### மேதின ஊர்வலத்தை
## பேரணியாக நடத்த கூட்டுறவாளர் முடிவு

(யாழ்ப்பாணம்)
இவ்வாண்டு மேதின ஊர்வலத்தை வரலாறு காணாத பேரணியாக நடாத்துவதற்கு கூட்டுறவாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

கூட்டுறவுத் தொழிலாளர்களின் மேதினப் பேரணியில் ஊழியர்களனைவரும் தொப்பி, (4ம் பக்கம் பார்க்க)

### தமிழகத்தில் வன்செயல்
## 2540 பேர் கைது

(சென்னை)
தமிழ்நாட்டில் கடந்த இரு நாட்களில் நடைபெற்ற வன்செயல்களில் 2540 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

பஸ் வண்டிகளுக்கு தீவைத் 4-ம் பக்கம் பார்க்க

### சீல்வைத்த பரல்களில்
## மண்ணெண்ணை குறைவாக வருவதாக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)
கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெய் பரல்களில் மண்ணெண்ணெய் குறைவாக வருவதாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

மண்ணெண்ணெய் பரல்கள் சீல் வைக்கப்பட்டே வருவதாகவும் எனினும் மண்ணெண்ணெய் குறைவாகவே வருவதாகவும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடி கொழும் [4-ம் பக்கம் பார்க்க]

### அம்பாறைமாவட்ட
## அகதிமுகாம்கள் அக்டோபரில் முழுமையாக மூடப்படும்

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் அகதி முகாம்கள் யாவும் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துடன் முழுமையாக மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா அரசு முழுமூச்சுடன் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் சுமார் 14 ஆயிரம் தமிழர்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகவிருப்பதாகவும் தெரியவருகிறது.

5,485 குடும்பங்களை சேர்ந்த இத் தமிழ் அகதிகள் 24 அகதி முகாம்களில் தங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகளை பொத்துவில் பகுதியில் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவாம். (ஈ-இ)

## இருவார மோதல்களில் 30 படையினர் பலி

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையில் கடந்த இருவார காலமாக நடைபெற்றுவரும் மோதல்களில் 30 படையினர் பலியாயினர் என்று ராணுவ அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

மணலாறுப் பகுதியில் இல (4-ம்பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### தேவை

கொரிவிக்ஸ், விவா, பேரத்தல்கள் தேவை. நபர் மூடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd, No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

ஸ்ருடியோ வேலையில் அனுபவமுள்ள, பழக ஆர்வமுள்ள இளைஞர்-யுவதிகளும், பெண் காசாளரும் தேவை. நேரில் வரவும். தரன் ஸ்ருடியோ, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-30)

### பயிற்சி

Basic, d Base I + Lotus 1, 2, 3, Word Processing பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Center, 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3020)

### A/L இந்துசமயம்

இந்து சமய 5 வருட வினாத்தாள்களின் தொகுப்பு விலை 24/-. சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகிறது. (இ-4069)

### விற்பனைக்கு

நல்ல இன 2 மாத அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு தொடர்பு: அ. குகன், 15/2, ஒடை லேன் (ராதா லேன்) வண்ணார்பண்ணை. (இ-35)

கண்ணாடி அலுமாரி (கடைக்குரியது, ஸ்ரீல் கபேட், சயிக்கிள், நீரிறைக்கும் இயந்திரம், மிருதங்கம், எக்கோடியன், தையல் மெசின் வீட்டுத் தளபாடங்கள், T V றேடியோக்கள், செராமிக் பொருட்கள், அம்மி, ஆட்டுக்கல், உரல் மற்றும் வீட்டுப் பாவனைக்குரிய பொருட்கள் விற்பனைக்குண்டு. இடம் 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3071)

Akai G X C 39 D டெக் பையனியர் றைக்கோட் பிளேயர் சன்சுயி அம்பிளிபயர் றைக்கோட்ஸ், மாஸ்ரர் கசெற்றுக்கள் பிலிப்ஸ் றெக்கோடிங், பிலிப்ஸ் கோவிலடி, தாவடி. பார்வையிடும் நேரம்: சனி, ஞாயிறு காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை (இ-36)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன்கோல்ட் கவரிங் நகைகள், மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177-A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (எ 3042)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-7)

### சுகவாழ்வுக்குத் தூபம்

நித்திய சுகவாழ்விற்குத் தினமும் காலை மாலை வீட்டில் நீம் தூபம் புகையுங்கள் அன்னை கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. -மிக்சைத். ஏ-3073)

### மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம்சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சுயந்திரசாலை, கொக்குவில். (ஏ-3022)

### BLACK & WHITE PRINTING PAPERS

கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களைப் பிரதி செய்வதற்குத் தேவைப்படும் பிரதித் தாள்களைத் தற்போது எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். B.S 117 12X10 (20-Sheets) B.S 111 15X12 20 Sheets) B.N.I P C B.S.4 P.C கலர்சி புகைப்பட சேவை, 1-வது மாடி, 337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3074)

### விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க 'இ' அட்டைகளுக்கு பங்குனி 93 கடைசி இரு வாரங்களுக்குரிய நிவாரண உலர் உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறியின் யாழ் பிராந்திய இணைப்பாளராக கடமையாற்றிய திரு ரி. தணிகாசலம்பிள்ளை முல்லைத்தீவு பிராந்திய கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்று செல்வதைமுன்னிட்டு கல்விப் பட்டப்பின் டிப்ளோமா பயிற்சிநெறி ஆசிரிய மாணவர்கள் நாளை சனிக்கிழமை காலை யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் பாராட்டு விழாவை நடாத்தவுள்ளனர்.

இவ்விழாவில் பயிற்சி நெறி மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (கே)

★

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் விசேட சித்திபெற்ற செல்வன் யூட் கிறேஷியனைப் பாராட்டி யாழ். சென். ஜேம்ஸ் சனசமூக நிலையம் எடுக்கும் பாராட்டு விழாவும் கலை நிகழ்வும் இன்று சென். ஜேம்ஸ்விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

யாழ். பேராலயப் பங்குத்தந்தை, யாழ். கல்விப் பணிப்பாளர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளும் இவ்விழாவில் நாடகம், 'பாடு நிலா' மெல்லிசை நிகழ்ச்சி ஆகியன இடம்பெறவுள்ளது.

## நிலக்கடலை செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

(உடுவில்)

அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலக்கடலை செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கைமேற்கொண்டு வருகின்றது.

பரீட்சார்த்தமாக மானிப்பாய், நவாலி பிரதேச செய்கையாளர்களுக்கு புனர்வாழ்வுக்கழகம் பல உதவிகளை வழங்கியுள்ளது சுமார் 200 குடும்பங்களுக்கு நிலக்கடலை செய்கைக்காக தலா இரண்டாயிரம் ரூபா வீதம் சுமார் 4 லட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது. (1.9

### கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உவிஞராட்சித் திணைக்களத்தினர் 1993ம் ஆண்டுக்கான ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், சித்த வைத்தியக் கண்காட்சி ஒன்றை யாழ் இந்துக்கல்லூரியில் ஜூன் மாதம் 4ம், 5ம், திகதிகளில் நடாத்த தீர்மானித்துள்ளார்கள்.

இந்தக் கண்காட்சி ஈழத்து அறிஞர்களும், படைப்பாளிகளும், எமது மொழியின் வளத்துக்கும் வளர்ச்சிக்கும் வனப்புக்கும் இதுவரையில் ஆற்றியுள்ள பணிகளைத் தமிழ் மக்கள் மதிப்பீடுசெய்து ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பெறுவதற்கே ஒழுங்கு செய்திருப்பதாக பிரதேச உவிஞராட்சி உதவி ஆணையாளர் சு. டிவாலாலா தெரிவித்துள்ளார். (சு)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 - 02 - 1916

மறைவு: 23 - 04 - 1991

அமரர்

**கணபதிப்பிள்ளை சிவஞானம்**

(News Agent - சங்கானை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"சரவண பவனம்",
முரளிவீதி (தேவாலய வீதி),
சங்கானை. (இ-38)

சாவகச்சேரி - மீசாலை

## அருள்மிகு பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில்

கந்தபுராணகலாச்சாரவிழா-புராணீகர்கள்கௌரவிப்பு

காலம்:- 24 04-93 சனிக்கிழமை காலை 8-30 மணி
இடம்:- ஷ ஆலயம்
ஆசியுரை: "சித்தாந்த பண்டிதர்"
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் புன்னாலைக்கட்டுவன்
வாழ்த்துரை: ஆத்மஜோதி நா. முத்தையா
பாராட்டுரை: திரு. பூ. சுந்தரம்பிள்ளை
(பிரதேச செயலர், சாவகச்சேரி)

சிறப்புரைகள்:

மேற்படி கந்தபுராண கலாச்சார விழாவிலும், புராணீகர்கள் கௌரவிப்பு விழாவிலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

க. சங்கரப்பிள்ளை
ஆலய பரிபாலன சபை சார்பில்)

மீசாலை,
சாவகச்சேரி (இ-34)

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மைதானசீர் திருத்த நிதிக்காக பழைய மாணவர் சங்கத்தால் நடாத்தப்படும்

## மாபெரும் இசைநிகழ்ச்சி

காலம்: 25-04-1993 ஞாயிறு மாலை 6·00மணி

இடம்: **பாடசாலை மைதானம்**

1. வட்டூர் பாமினி இசைக்குழுவினரின் **இசை மாலை**
2. நகைச்சுவை நாடகம்
3. 'உதயம் "கூவுகுயிலே" ஒலிப்பதிவு நாடாப் புகழ்

யாழ். ரமணனின் இசையமைப்பில் உருவான

**ராஜன் இசைக்குழுவினரின் 'இன்னிசை கானம்'**

பிரவேசம் ரூபா 10/-

விளம்பர அன்பளிப்பு:

ஜெயமதி நகை நிலையம்,
இல: 214, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (இ-40)

## நன்றி நவில்கின்றோம்

இம்மாதம் 10-ம் திகதி சனிக்கிழமை (10-04-1993) அகால மரணமடைந்த எமது குடும்பத் தலைவர் திரு. க. புவனேந்திரன் (உபதலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை, ஆசிரியர் யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம்) அவர்களின் இறுதிக் கிரியைகளிற் கலந்து அதனைப் பொறுப்பேற்று நடாத்தி வைத்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினருக்கு எமது நன்றியை முதற்கண் தெரிவிப்பதுடன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண அங்கத்தவர்கட்கும், ஏனைய பிரிவுப் பிரதிநிதிகட்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினருக்கும் ஏனைய அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகட்கும் யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும், இலங்கை வங்கி யாழ். மாவட்டக் காரியாலயம், இலங்கை வங்கி - பிரதான கிளை மற்றும் ஏனைய கிளை உத்தியோகத்தர்கட்கும் இறுதிக் கிரியைகளிற் பங்கு கொண்டு மலர்வளையங்கள், பூமாலைகள், அனுதாபங்கள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கட்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்ற அதே வேளையில், தனித்தனி நன்றிகூற முடியாமைக்கு வருந்துகின்றோம்.

நன்றி

மனைவி, பிள்ளைகள்.

91/5, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (இ-39)

யாழ்ப்பாணம்

# தமிழக சட்டப்பேரவையை விரைவில் கலைக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் அமைதியின்மை, குழப்பம் காரணமாக சட்டப்பேரவையைக் கலைக்கும் சாத்தியம் ஏற்பட்டுவருவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அ.தி.மு.க.வுக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும்இடையே ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து, சட்டப்பேரவையில் கூச்சல் குழப்பமும் அமைதியின்மையும் நிலவிவருவதோடுஅன்றாட நிகழ்ச்சிகளும் தடைப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

ஆளும்கட்சி உறுப்பினர்களால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேரவைக்கு உள்ளேயும் வெளியேயும் தாக்கப்பட்டுள்ளனர்.

சட்டசபையில் அராஜகம் தலைவிரித்தாடுவதாகக் கூறி காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்தைப் புறக்கணித்துள்ளனர். அதேசமயம் எதிரணி உறுப்பினர்கள் பல முறைபேரவையிலிருந்துஇடை நிறுத்தப்பட்டுமுள்ளனர்.

அவைச் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு, எதிர்க்கட்சியினரைப் பேசவிடாது தடுத்து வருவதாக குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

இந்நிலையில் நேற்றுமுன் தினம் நள்ளிரவு எதிர்க்கட்சி உறுப்பினர்களான திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஞானசேகரன் ஆகியோர் செல்வி ஜெயலலிதாவின் ஆணையின் கீழ் கைதாகியுள்ளனர். மற்றொரு உறுப்பினரும் கைதாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கைது பற்றி எதிர்க்கட்சி தலைவர் பாலசுப்பிரமணியம் தெரிவிக்கையில் கூறியதாவது: இது அரசியல் உள்நோக்கம் கொண்டவிடயமாகும். கொலை கொள்ளைக்காரர்களைக் கைது செய்வதுபோல் பேரவைஉறுப்பினர்களை நள்ளிரவில் கைது செய்வது அநாகரிகமான செயலாகும். இச்செயல் அரசின் ஆணவத்தையும் அராஜகத்தையுமே காட்டுவதாக உள்ளது. அ.தி.மு.க. அரசு தனக்குத்தானே குழிபறித்துக் கொண்டுவருகிறது என்றார்.

உடற்பயிற்சிபெற்ற காவலர்களை சாதாரண பேரவைஉறுப்பினர்கள் தாக்கி காயப்படுத்தியதாக கூறப்பட்டதை, சபாநாயகரும் முதலமைச்சரும் நம்பி இவர்களைக் கைதுசெய்திருப்பது கேவலமான செயல் எனவும் உண்மையில் பரிதி இளம்வழுதியே காவலர்களால் தாக்கப்பட்டார் எனவும் வர்ணித்தார்.

இதேவேளை தமிழக அரசின் அராஜகசெயல்களையிட்டு சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து நேற்று ஆளுநரைச் சந்தித்து முறையிட்டுள்ளனர். (கே)

## நியமனம் வழங்குவதற்கு பணியாளருக்கு அனுமதி

(கொழும்பு)

கொட்டகலை பயிற்சிப் பாடசாலைக்கு விண்ணப்பித்து அங்கு செல்லமுடியாதோருக்கு நியமனப் பயிற்சி நடத்தி நியமனம் வழங்க யாழ். கல்விப் பணிப்பாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சி, யாழ்ப்பாண கல்வித்திணைக்களம் ஊடாக பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே)

## பட்டதாரி பயிலுனருக்கு சம்பள உயர்வு

(திருநெல்வேலி)

பட்டதாரிப் பயிலுநர்களுக்கும், பயிலுநர் ஆசிரியர்களாகக் கடமை புரிபவர்களுக்கும் இவ்வாண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஆசிரியர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட சம்பள உயர்வினை வழங்க மாகாண அரசு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வாக ரூபா 500 வழங்கப்பட்டது. இதேபோல் இவர்களுக்கும் அதிகரிக்கப்பட்டபடி அடுத்த மாதம் முதல் வழங்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அதிபர் தரங்களில் உள்ளவர்களுக்கும் இதற்கேற்ற அதிகரிக்கப்பட்டபடிகள் வழங்கப்படவுள்ளன. (157)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அமரர் இளையதம்பி சபாலிங்கம் நினைவாக, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தும் நினைவுப்பேருரையில் பேராசிரியர் வ. ஆறுமுகம் ''யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம்'' என்ற தலைப்பில் உரைநிகழ்த்த இருக்கின்றார். (சு)

## அதிபர்களுக்கான கூட்டம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான பொதுக் கூட்டம் இம்மாதம் 26ம் திகதி திங்கள் கிழமை காலை 9-00 மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. [139]

## தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்படும் இலவச தையல் பயிற்சி வகுப்பில் சேர்ந்து தையல் பயில விண்ணப்பித்தவர்கள் யாவரும் சங்கத் தலைவி திருமதி கணேஸ்வரி செல்லையாவுடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (154)

## லொறி விபத்து ஒருவர் பலி

(கிளிநொச்சி)

வேகமாகவந்த லொறிஒன்று தடம்புரண்டதில் சோமசுந்தரம் முருகதாஸ் என்பவர் மரணமானார்.

இந்த லொறி தடம்புரண்ட போது பாடசாலை மாணவிஒருவர் காயமடைந்தார் முருகதாஸின் மரண விசாரணையை கிளிநொச்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்திமேற்கொண்டார். கிளிநொச்சி காவல்துறைப் பொறுப்பதிகாரி தலைமையிலான காவல்துறையினர் ஸ்தல விசாரணையை மேற்கொண்டனர். [83]

## எயிட்ஸ் ரத்தம் ஏற்றிய 1147 பேருக்கு நஷ்டஈடு

(மாட்ரிட்)

ஸ்பெயின் நாட்டில் அரச மருத்துவமனைகளில் இரத்தம் ஏற்றிய 1147 பேருக்கு எயிட்ஸ் நோய் பரவியுள்ளது.

தங்களுக்கு நோய்க்கிருமிகளை ஏற்றியதனாலேயே எயிட்ஸ் நோய் வந்துள்ளதாக அவர்கள் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் 25 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க அரசு முன்வந்துள்ளது. (கே)

## இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் இன்று 23-ம் திகதி தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் ஸ்ரீ முருகன் வில்லிசைக் குழுவினர் (உடுப்பிட்டியூர் யோகன்) வில்லிசை நிகழ்ச்சியை நடாத்த இருக்கின்றார்கள். (சு)

0 0

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோவிலில் இன்று வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகின்றது. தினமும் பகல் 10 மணிக்கு விசேட அபிடேக ஆராதனைகளும், மாலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி வீதியுலா வருதலும் நடைபெறும். (59)

0 0 0

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்தின் 45-ம் ஆண்டு நிறைவு விழாவும் திருமலர்கள் பாலர் பாடசாலையின் 13வது வருடாந்த விளையாட்டுப் போட்டியும் இன்று 23ம் திகதி நெல்லண்டை அம்பாள் ஆலய மைதானத்தில் திரு. ஏ. இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறுகின்றது. [52]

## ஓய்வூதியம்

(மானிப்பாய்)

ஓய்வூதியத் திணைக்களம் இவ்வருடத்திற்கான ஓய்வூதியம் பின்வரும் திகதிகளில் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படுமென்று அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் மே 11, யூன் 10, யூலை 12, ஆகஸ்ட் 12 செப்ரம்பர் 14, ஒக்டோபர் 12, நவம்பர் 11, டிசம்பர் 14 என குறிப்பிடப்பட்டுள்ளது. (71-க)

## நிரந்தர பதவிக்கான விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளிலுள்ள ஆய்வுகூடப் பணியாளர், காவலாளர், நூல் நிலையப் பணியாளர், பாடசாலைத் தொழிலாளர், சுகாதாரத் தொழிலாளர் ஆகிய நிரந்தர பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் வெளிவாரி விண்ணப்பதாரிகள் திருகோணமலை கல்வி அமைச்சிற்கு அனுப்பவேண்டிய தமது விண்ணப்பங்களை தமக்கு அண்மையிலுள்ள கோட்டக் கல்வி அலுவலகத்தில் இம்மாதம் 28-ம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பங்களை திருகோணமலை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தியோகத்தர் ஒருவர் மூலம் நேரடியாக இம்மாதம் 30-ம் திகதிக்கு முன் அனுப்பவேண்டிய நடவடிக்கையை யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (159)

## இளம்வழுதி, ஞானசேகரன் நேற்று விடுதலையானார்கள்

(சென்னை)

நேற்று முன்தினம் நள்ளிரவு கைதுசெய்யப்பட்ட சட்டப் பேரவை இ. காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரனும், தி. மு. க. உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியும் நேற்று சென்னை நீதிமன்றத்தில் வைத்து விடுதலைசெய்யப்பட்டனர்.

இவர்கள் சட்டப்பேரவைக் காவலர்களைத் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்தை நிரூபிக்கக்கூடிய வழக்கு கோப்புகள் நீதிமன்றத்தில்சமர்ப்பிக்கப்படவில்லைஎனவும் பொலிஸ் தரப்பில் அவர்களைக் காவலில் வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படாததாலும் அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் என்று இந்த வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட் திரு எம். வி. ரமணி தீர்ப்பளித்தார். (வி)

## வெறுந்தரையில் எம்.எல்.ஏக்கள் இருவரும் படுக்கவைக்கப்பட்டார்கள்

(சென்னை)

கௌரவமிக்க சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருவரும் சென்னைகோட்டை காவல் நிலையத்தில் வெறுந்தரையில் படுக்கவைக்கப்பட்டார்கள் என்று தி மு க. உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி, இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஞானசேகரன் ஆகியோர் சார்பில் வழக்கில் ஆஜராகிய பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்தார்.

அவர்களுக்கு உணவும் கொடுக்கப்படாமல் கேவலமாக நடத்தப்பட்டார்கள் என்றும் திரு பீட்டர் அல்போன்ஸ் மேலும் வாதிட்டார்.

அரசியல் உள்நோக்கம் கொண்ட இந்த வழக்கில் குற்றவாளிகள் எனப்படுபவரை காவலில்வைக்கக்கோராமல் பொறுப்பை நீதிமன்றத்தில் விட்டிருப்பது இந்த நீதிமன்றத்தையும் பேரவைத்தலைவர் தமது அதிகார வரம்பிற்குள் கொண்டுவர மேற்கொண்ட ஒரு நிகழ்ச்சியாகும் என்று கூறினார். (வி)

## நவாஸ் சரீப் மனு விசாரணை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு எதிராக முன்னைய பிரதம மந்திரிநவாஸ் ஷெரீப் தாக்கல் செய்த மனுவை உயர் நீதி மன்றம் ஏற்றுக் கொண்டு விசாரணை நடாத்தவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 3ம் திகதி நடக்க இருக்கும் விசாரணைக்கு அரசாங்கத்தை வருமாறு உயர் நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-சி)

## கணக்கியல் பெறுபேறுகள்

(திருநெல்வேலி)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு இறுதி வருடப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

1992ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற இப்பரீட்சைக்கு யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த 40பேருக்கு மேல் தோற்றினார்கள்

இப்பரீட்சையில் திரு. செ. மனோகரன், செல்வி விஜயலட்சுமி, க. கனரஞ்சிதராஜன் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். அதுடன் 4 பேர் நூதன சித்தியும் அடைந்துள்ளனர். [157]

## திருநாள்

(அரியாலை)

யாழ். அரியாலை புனித யூதாததேயூ அப்போஸ்தலரின் வருடாந்த திருவிழா நடைபெற்று வருகிறது தினமும் ஆராதனைகளும் பூசைப் பலியும் நிறைவேற்றப்படுகின்றன. (59)

## இராசி பலன்

23-04-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை 10)

பிரதமை மு. ப 7-22வரை பரணி பி. ப. 5-29 வரை, இராகுகாலம் காலை 10-30 முதல் 12-00 வரை, சுப நேரம் காலை 6-00 முதல் 7-30 வரை.

மேடம்: சுபவைபவங்கள், கௌரவம் வெகுமதிகள்.

இடபம்: மித்திர துவேஷம் மனக் கஷ்டம், கவலை.

மிதுனம்: ஆனந்தம், தொழில் இறப்பு. பணவரவு.

கடகம்: காரிய சித்தி பெரியோர் ஆசி, குடும்ப சுகம்

சிங்கம்: ஜீவன கஷ்டம், அலைச்சல், அடிபணிதல்.

கன்னி: அதிருப்தி, மன சஞ்சலம், அசம்பாவம்,

துலாம்: தொழில் லாபம், புதிய முதலீடு, மனமகிழ்ச்சி.

விருச்சிகம்: புண்ணிய காரிய செலவு, காரிய தாமதம், வெறுப்பு

தனுசு: உற்சாக குறைவு, தொழில் கஷ்டம், மனப் பயம்,

மகரம்; சபல புத்தி, இன சன விரோதம், வீண்வம்பு,

கும்பம்: இலக்கிய சிந்தனை, வாக்குவன்மை, தியாகம்.

மீனம்: சுகக்குறைவு, கஷ்ட பயணம், கிலேசம்.

— ஜோஸ்யர்

ரஷ்ய தேர்தலில்

# வெளிநாடுகளில் உள்ள ரஷ்யரும் வாக்களிக்கலாம்

(மாஸ்கோ)

ரஷ்யாவில் ஜனாதிபதி பொரிஸ்ஜெல்ஸினின்சீர்திருத்தக் கொள்கைகளை ஆதரித்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பில் வெளிநாடுகளில் வாழும் சுமார் 60 ஆயிரம் ரஷ்ய மக்களும் வாக்களிப்பில் கலந்து கொள்ள உரிமைஉண்டு என்று ரஷ்ய வெளி உறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

உலகில் 130 நாடுகளில் வாழும் ரஷ்ய மக்களுக்காக ஆங்காங்கே 300 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்களிப்பு முடிந்ததும் அரசப் பணி தபால் உறைகளில் வாக்குகள் மாஸ்கோவுக்கு அனுப்பிவைக்கப்படுமென்றும் வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி-இ)

# ஜனாதிபதி நாடாளுமன்றில் 70 நிமிட நேரம் உரை

(கொழும்பு)

இரண்டாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரில் உரையாற்றிய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா 70 நிமிட நேரம் பேசினார்.

இதில் 25 நிமிடம் நேரம் கடந்த வருடம் தமக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை குறித்தும் ஜனாதிபதி தேர்தல் காலத்தின்போது ஜே. வி. பி. இயக்கத்தினர் மூலம் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட வன்செயல்கள்பற்றியும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்ற வரும்போது ராஜகிரியாவில் உள்ள சுதேச மருத்துவபீட கல்லூரியில் ஏழு மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றைநடத்திக்கொண்டிருந்தனர் நேற்று முன்தினம் இரவு இந்தப்போராட்டத்தை மேற்படி மாணவர்கள் ஆரம்பித்தனர்.

இதேவேளையில் நேற்று மேற்படி கல்லூரியை பொலிசார் திடீரெனசுற்றிவளைத்துள்ளனரையும் உள்ளே செல்லவோ உள்ளிருந்து எவரையும் வெளியே வர அனுமதிக்கவோ இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

# தமிழக விடயத்தில் ஆளுநர் தலையிடவேண்டும்

(சென்னை)

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைக்கப்பட்டுவிட்டதாகவும் இது விடயத்தில் ஆளுநர் தலையிடாவிட்டால் நிலைமை மோசமாகிவிடும் எனவும் தமிழக எதிர்கட்சி தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தி. மு. க. உறுப்பினர் பரிதி இளம்வழுதி மற்றும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. இராஜசேகரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டது சம்பந்தமாக கருத்து வெளியிடுகையிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் சம்பந்தமாக அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று நேற்று சென்னையில் நடைபெற்றது. (க)

யாழ். நகரில்

# வயிற்றோட்ட நோய் 43 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இதுவரை 43 பேர் வயிற்றோட்ட நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாநகரசபை சுகாதார வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன

வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்கள் என்றும் இந்த 43 பேரும் யாழ்ப்பாணம், குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் சுகாதார வசதிகள் இப்பகுதியில் மிகவும் சீர்குலைந்து காணப்படுவதினாலேயே வயிற்றோட்டநோய் இங்கு வேகமாகப் பரவிவருவதாகவும் சுகாதார அறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி-இ)

## அகோர ஷெல்தாக்கு

(எழுதுமட்டுவாள்)

நேற்று இரவு ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளாலி கடல்பரப்பு கரையை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளையில் கிளாலி கடல்பரப்பிலிருந்துதுப்பாக்கு வேட்டு சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்ததாகவும் தெரியவருகிறது. [170]

## ஐவர் பலி

(புதுடில்லி)

மகாராஷ்டிரத்தில் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட பெட்டிகள் வெடித்ததில்ஐந்து பேர் பலியானார்கள்; பலர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி பகுதியில் உள்ள ரயில் நிலையத்தில் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட பெட்டிகளை ரயிலில் ஏற்றும் போது திடீரென ஏற்பட்ட தீயினால் வெடி மருந்துப் பெட்டிகள் இரண்டு வெடித்ததில் 5பேர் அதே இடத்தில் பலியானார்கள். பலர் படுகாயமடைந்ததுடன் ரயில் நிலையமும் சிறிது சேதமடைந்தது. (வி)

# மேதின ஏற்பாடுகள்: நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மேதின ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனக் காரியாலயத்தில் திரு. வை செகராசசிங்கம் தலைமையில் நடைபெறும்.

சனசமூக நிலையங்களின் உபசமாசங்களின் தலைவர் செயலாளர் பாலர் பாடசாலை ஆசிரியைகள் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள், உப தபால் அதிபர்கள், சிற்றூழியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை 24-ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அஞ்சல் சேவையைச் சீர்ப்படுத்த வேண்டிய ஆலோசனைகளைப் பெறும் பொருட்டு இத்திணைக்களத்தைச் சேர்ந்த சகல தரங்களிலுமுள்ள உத்தியோகத்தர்கள், உப அஞ்சல் அதிபர்கள், ஊழியர்கள் அனைவரையும் மேற்படி கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் கேட்டுள்ளார். (ரி)

## குஜராத்தில் குண்டு வெடிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் 35 பேர் படுகாயமடைந்துள்ளார்கள்.

குஜராத் மாநிலத்திலுள்ள மேற்கு பாளயப் பகுதியிலுள்ள ரயில் நிலையத்தின் மீது இக்குண்டு இனம் தெரியாத ஒருவரால் வீசப்பட்டதாக நேரில் பார்த்தவர்களில் சிலர் பொலிசாரிடம் தெரிவித்தனர். (வி)

மேதின ஊர்வலத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோல உடை, பட்டி என்பன அணிந்து கலந்துகொள்ளவுள்ளனர்.

ஊர்வலத்தில் கலோசங்கள், பதாதைகள் ஊர்திகள் என்பனவும் எடுத்துவரப்படவுள்ளன.

ஊர்திகளில் பொருளாதாரத்தடை, கல்வித் துறை பாடுகள், மருந்துத்தடை, ஸ்ரீலங்கா அரசின் அடாவடித்தனங்கள், தென் தமிழீழ அழிப்புநடவடிக்கைகள் ... 

தமிழகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல். பொதுமக்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் போன்ற குற்றங்களுக்காக 88 பேர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளையில் மேற்படி வன்செயல்களினால் ஐயாயிரம் இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தி முற்றிலும் தவறானது என்று பொலிசார் தெரிவித்தனர். (வி-இ)

எதிர்க்கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விர்த்தனையை கண்டித்தும் தாம் ஜனாதிபதியின் உரையை புறக்கணித்து வெளிநடப்புச் செய்வதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செய்தியாளரிடம் தெரிவித்தனர். (வி-இ)

இடைக்காட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ர்ந்து இடம்பெற்று வருவதாகவும் குறிப்பாக மட்டக்களப்பு தொப்பிகல பகுதியில் இடம்பெறும் சயண II இராணுவ நடவடிக்கை தொடர்வதாகவும் தெரிவித்தார். (க-இ)

சில்லைத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் வைத்தே நடைபெறுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (159-இ)

இருவார

(4-ம் பக்கம் பார்க்க)

வாரங்களுக்குமுன் விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஒரு இராணுவ அதிகாரியுட்பட 19 படையினர் கொல்லப்பட்டதனையும் அவ்வதிகாரி சுட்டிக்காட்டினார். (க-இ)

# இந்திரா காங்கிரஸ் மீது ஜெயலலிதா பாய்ச்சல்

(சென்னை)

பழனி, ராணிப்பேட்டை இடைத்தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு திரைமறைவில் சதித்திட்டங்களை இந்திரா காங்கிரஸ்கட்சி தீட்டிவருகின்றது என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சட்டசபையில் நேற்று தெரிவித்தார்.

தமிழக அரசைக் கலைக்க வேண்டும் என்ற நோக்குடன் இந்திரா காங்கிரஸ்கட்சி உறுப்பினர்கள் சட்டசபையின் மாண்புகளை குலைக்கும் விதத்தில் அண்மைக் காலங்களில் நடந்து வருகின்றார்கள்.

இவர்கள் நன்கு திட்டமிட்டு செயல்பட்டு இந்த சம்பவங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தி தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்குகள் சீர்குலைந்துவிட்டதெனவும் ஆகவே தமிழக அரசை உடன் கலைத்துவிடும்படி ஜனாதிபதிக்கும், பழனி, ராணிப்பேட்டைத் தேர்தல்களை ஒத்திவைக்கும்படி தேர்தல் கமிசனுக்கும், அண்மைக்காலங்களில் பல பொய்யான தகவல்களை ஆதாரமற்ற முறையில் அனுப்பி வைத்துள்ளார்கள்.

ஜனாதிபதியும், தேர்தல்கமிஷனும் இக்குற்றச் சாட்டுகளுக்கு எம்மிடம் பலதடவைகள் விளக்கம் கேட்டு கடிதம்எழுதியுள்ளார்கள். அவர்களின் கடிதங்களுக்கு நாம் ஆதாரபூர்வமான பதில்களை அனுப்பி வைத்துள்ளோம். (வி-இ)

## வெற்றிலை 10 ரூபா

(அரியாலை)

இராணுவ நடவடிக்கையினால்பலவெற்றிலைத்தோட்டங்கள் அழிந்து போனதாலும் போக்குவரத்து சீர் குலைந்துள்ளதாலும்வெற்றிலைக்குபலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. வெற்றிலை ஒன்று நேற்று யாழ் நகரில் 10 ரூபாவாக விற்கப்பட்டது. (59)

ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படகுகளோடு கடற்படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (கே-இ)

லலித் கட்சியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கமவில் வைத்து திரு பிரேமச்சந்திரன் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். குறிப்பிடப்படாத குற்றங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு திரு.பிரேமச்சந்திரா பொலிஸ் நிலையம் கூட்டிச் செல்லப்பட்டு மறுநாள் விடுதலைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பொலிசாரின் இந்நடவடிக்கை இப் பகுதியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவாளர்களை மிரட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஓர் நடவடிக்கை என்றும் தனது கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு தடங்கல் ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஓர் நடவடிக்கைஎன்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேற்படி கட்சியின் தலைவர் லலித் அத்துலத்முதலி கருத்து தெரிவிக்கையில், பொலிசாரின் இச்செயல் தனது கட்சிக்கு செய்யப்பட்ட இம்சை என்றும் தனது கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு தடங்கல் ஏற்படுத்தும் ஒரு செயல் என்றும் தெரிவித்தார்

மேற்படி சம்பவம் குறித்து திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா நேற்று பி. பி. ஸியின் சிங்கள ஒலிபரப்பான சந்தேசியாவுக்கு வழங்கிய பேட்டியில் சாதாரண உடை அணிந்த பொலிசார் தனது இல்லத்திற்கு வந்திருந்ததாகவும் அப்போது அங்கிருந்த 40 பேரை கைது செய்து அடுத்த நாட் காலை வரை பொலிஸ் காவலில் வைத்திருந்ததாகவும் கைது செய்யப்பட்ட ஒருவரை பொலிசார் அடித்து பின்னர் மோட்டார் விபத்து குறித்து அவர் மீது குற்றம் தாக்கல் செய்ததாகவும் தெரிவித்தார். (க)

...நோக்கும் அச்சுறுத்தல், ஸளாவிப் படுகொலைகள், பெண் விடுதலை போன்ற காட்சிகள் சித்தரிக்கப்படும்.

மக்கள் சக்தியை இவ்ஊர்வலத்தில் கூட்டுறவுத் தொழிலாளர்கள் எடுத்துக்காட்டவுள்ளது குறிப்பிடத் தக்கது. (159-இ)

தமிழர் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடும் பெருந்தொகைப் பணத்தை மீதப்படுத்த முடியும்.

1989 ம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு 800 கோடி ரூபாவாக இருந்தது. இன்று அது 2300 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்தப் பெருந்தொகைப் பணத்தை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பயன்படுத்தலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக வடக்குகிழக்கு பிரச்னைக்குசமாதானத்தீர்வு ஒன்றைக்காண முடியுமானால் அப்பாவிப் பொதுமக்களின் அநியாய அழிவுகளையும் நாம் தடுக்க முடியும்.

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும். இதில் சகல தரப்பினரும் தெரிவிக்கும் கருத்துக்களும் ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

அனைத்துக் கட்சி மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கும் கவனம் செலுத்தப்படும். நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவுகளையும் ஆவலுடன்எதிர்பார்க்கிறோம்.

அதன்பிறகு அரசு இது தொடர்பாக ஒரு உறுதியான முடிவை எடுக்கும். ஒருமுடிவுக்கு வந்ததுமே நாம் அதனை அமுல்படுத்துவோம்.

இந்த வருடம் நாம் 2300 வது பௌத்த நூற்றாண்டைக் கொண்டாடுகிறோம். எனவே இந்த ஆண்டிலேயே இனப் பிரச்னைக்கு ஒரு அமைதித் தீர்வு காணப்படவேண்டும்.

ஆயுதங்களைக் கைவிட்டு நாம் தமிழர் பிரச்னைக்கு இந்த வருடத்தில் ஒருசமாதானத்தீர்வு காண்போம். (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 60-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office, Srilanka under license Number B/10536/B